டிரஸ்ட் ஆரம்பித்திட...
புதிதாக டிரஸ்ட், பவுண்டேஷன், கட்சி, ஆசிரமம், சங்கம், மன்றம், கழகம் பதிவு செய்திட தொடர்பு கொள்ளவும்.
பகவான் பவுண்டேஷன்
96004 02096

நல்லவே எண்ணல் வேண்டும்.., எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" DAILY NEWS PAPER
★SAKKRA VIYUGAM★

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 146 20.11.2025 THURSDAY KARTHIGAI : 3 PRICE : RS.5/-
மலர் : 01 இதழ் : 146 20.11.2025 வியாழக்கிழமை கார்த்திகை : 3 விலை : ரூ.5/-

3 திருச்சியில் ஜனவரி 2 திராவிட மாடல் ஆட்சி மீண்டும் தொடர மக்களிடம் ஆதரவு கேட்டு நடைபயணம் வைகோ பேட்டி

4 ஆளாளுக்கு கிளம்பிட்டாங்களே! திமுக அதிமுகவுக்கு குடைச்சல் கொடுக்கும் கூட்டணி! 2026ல் பீகார் மாடலா?

2 மண்ணை கவ்விய காங்., திமுக எடுத்த திடீர் முடிவு! ராயப்பேட்டைக்கு வண்டியை விடும் விஜய்! பரபர ட்விஸ்ட்!

# சென்னையில் 15க்கும் மேற்பட்ட இடங்களில் அமலாக்கத் துறை அதிகாரிகள் சோதனை!

சென்னை: நவ.20-

சென்னையில் சைதாப்பேட்டை, கோடம்பாக்கம், கே.கே. நகர், எம்ஜிஆர் நகர், கீழ்ப்பாக்கம், சவுகார்பேட்டை, திருவேற்காடு, அம்பத்தூர் உள்ளிட்ட 15க்கும் மேற்பட்ட இடங்களில் அமலாக்கத் துறை அதிகாரிகள் இன்று காலை முதல் சிஆர்பிஎப் வீரர்கள் துணையுடன் சோதனை நடத்தி வருகின்றனர்.

இச்சோதனையானது, தங்க நகை வியாபாரம், இரும்பு மொத்த வியாபாரம் உள்ளிட்ட தொழில்களை மேற்கொள்ளும் தொழிலதிபர்கள் தொடர்புடைய இடங்களில் நடத்தப்படுகிறது. மேலும், சட்டவிரோத பணப் பரிமாற்ற வழக்கில் சோதனை நடப்பதாக அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

எங்கெல்லாம் சோதனை? சென்னை சவுகார்பேட்டை கந்தப்ப முதலி தெருவில் உள்ள பவர்லால் முத்தா என்ற தொழிலதிபர் வீட்டில்



சோதனை நடைபெறுகிறது. அதேபோல் கீழ்ப்பாக்கம் வேடலஸ் சாலையில் சைதன்யா அடுக்குமாடி குடியிருப்பில் இரும்பு மொத்த வியாபாரம் செய்யும் நிர்மல் குமார் என்பவர் வீட்டில் இன்று காலை முதல் சோதனை நடத்தப்பட்டு வருகிறது. கேகே நகர் முனுசாமி சாலை மற்றும் மற்றும் லட்சுமண சாமி சாலையில் தங்க நகை வியாபாரி மஹாவீர் தொடர்புடைய இடங்களில் அமலாக்கத் துறை சோதனை நடத்தி வருகிறது.

எம்ஜிஆர் நகர், அண்ணா பிரதான சாலையில் உள்ள ஒரு முகவரியிலும் அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர்.

மேலும், சைதாப்பேட்டை ஸ்ரீநகர் காலனி தெற்கு மாட வீதியில் உள்ள ஷாம் தர்பார் அபார்ட்மெண்ட்டில் தொழிலதிபர் கலைச்செல்வன் வீட்டில் சோதனை நடத்தி வருகின்றனர்.

அதுமட்டுமின்றி, அம்பத்தூர் திருவேங்கட நகர் ஆர்க் டெக் ரெசிடென்சி என்ற முகவரியில் வழக்கறிஞர் பிரகாஷ் வீட்டில் அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர். சென்னை கோடம்பாக்கத்தில் சுகாலி எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனத்திலும் சோதனை நடத்தப்பட்டு வருகிறது.

ஒரே நேரத்தில் சென்னையில் பல்வேறு இடங்களில் நடைபெற்று வரும் அமலாக்கத் துறை அதிகாரிகள் சோதனை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



## சின்னமனூரில் பகுதியில் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை நகராட்சி நிர்வாக துறை துணை இயக்குனர் திடீர் ஆய்வு

தேனி. நவ.20

தேனி மாவட்டம் சின்னமனூர் பகுதியில் நகராட்சி நிர்வாக துறை இணை இயக்குனர் அனாமிகா அவர்கள் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை ஆய்வு மேற்கொண்டார். சின்னமனூர் பகுதியில் உள்ள அரசு மருத்துவமனை அரசு ஆரம்ப பள்ளி கட்டிடம் மற்றும் சின்னமனூர் அருகே உள்ள கீழப்பூலானந்தபுரத்தில் உள்ள சாலை ஆகியவை ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது, கட்டடத்தின் அளவுகள் சரியான முறையில் இருக்கிறதா என்பதை அளவுகோல் மூலம் அளக்கப்பட்டு, அதேபோல் கட்டிடத்தின் செங்கல்களை தரமான முறையில் இருக்கிறதா எனவும் சாலைகள் சரியான முறையில் இருக்கிறதா எனவும் பார்வையிட்டார். சின்னமனூர் நகராட்சி ஆணையாளர் கோபிநாத் மற்றும் சம்பந்தப்பட்ட துறை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர். .....

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

அழையுங்கள்! வாசகர்களே!!

தங்கள் பகுதிகளில் நடக்கும் தாங்கள் காணும் விரும்பத்தகாத செயல்கள், அவலங்கள், சட்டத்திற்கு புறம்பான செயல்பாடுகள், பெண்களுக்கு எதிரான கொடுமைகள் மற்றும் சமூகத்தில் நடக்கும் தங்களால் தட்டிக் கேட்க இயலாத அநீதிகளை எங்களுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்தவும். (ரகசியம் பாதுகாக்கப்படும்)

(24 x 7)

88705 00000
sakkraviyugam2025@gmail.com

# கோவில் ஆபீசர் நான்தான்......!

## தில்லாலங்கடி திருநாவுக்கரசு

பெரம்பலூர் மாவட்டம், பாடாலூர் ஆஞ்சநேயர் கோவிலில் அன்னதானத் திட்ட உதவியாளராக பணியிலுள்ள பாடாலூரைச் சேர்ந்த திருநாவுக்கரசு என்பவர் கடந்த இரண்டு வருடங்களாக அன்னதானத்திட்ட அரிசி உள்ளிட்ட மளிகை பொருட்கள் அனைத்தையும் கோயிலில் உள்ள பொருட்கள் வைப்பறையில் (Store Room) வைக்காமல் தனது வீட்டில் வைத்துக் கொண்டு வாரம் ஒரு முறை தேவையான சாமான்களை மட்டும் எடுத்து வந்து அன்னதானத்திற்கு கொடுக்கிறாராம். தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள அன்னதானம் நடைபெறும் எந்த கோயில்களிலும் இது போன்ற அநியாயம் நடந்ததாக தகவலில்லை

அன்னதான திட்ட சாமான்களை வீட்டில் வைத்துக் கொண்டு அவ்வப்போது எடுத்து வருவது பெரும்பாலானோருக்கு தெரிந்த நிலையிலும் கூட செயல் அலுவலர் பெயரளவில் கூட கேட்கவில்லை என்பதுதான் கொடுமையிலும் கொடுமை

எல்லா கோயிலுக்கும் உண்டியல் எடுக்க முதற்கொண்டு எல்லா வேலைகளுக்கும் இஓ என்னைதான் அலைச்சிக்கிட்டு போவாங்க. தண்டபாணி கணக்கபிள்ளையா இருக்கும் போது முதல் இதுவரைக்கும் கணக்கு, வழக்கு, வரவு, செலவு எல்லாமே எனக்குத் தெரியும். அதுனால இஓ என்கிட்ட எதுவும் கேள்வி கேட்க முடியாது என்று கொக்கரித்து வருகிறாராம் அன்னதானத்திட்ட உதவியாளர். அதனால்தானோ என்னவோ செயல் அலுவலர் எதுவும் கண்டுகொள்ளவில்லை என்கின்றனர் ஏரியா வாசிகள்.

கோயிலில் அய்யர்களைக்கூட தன் சொல்பேச்சி படிதான் நடந்துகொள்ள வேண்டுமென்று வைத்துள்ளதால், சிறப்பு பூஜைகள்



நடைபெறும் காலங்களில் அன்னதானத் திட்ட உதவியாளர் திருநாவுக்கரசு ஆஞ்சநேயருக்கு அலங்காரம் செய்து வருகிறார்

உள்ளூர், வெளியூர்வாசிகளிடம் தன்னை கோவில் ஆபீசர் என்று கூறிக்கொண்டு பிரகடனப்படுத்தி வருவதால், அன்னதானத்திட்ட உதவியாளரை முன்னிலைப்படுத்தி அனைவரும் அன்னதானத்திற்கும், உபயத்திற்கும் பணத்தை கொடுத்துவிட்டு செல்கிறார்கள். ஆனால், இத்தொகை முழுவதும் செயல் அலுவலரின் கவனத்திற்கு செல்கிறதா என்பது கேள்விக்குறியே

ஒரு வழக்கறிஞரிடம் கூட தன்னை ஆபீசர் என்று கூறி, யாருகிட்ட வேணும்னாலும் சொல்லு என்ன ஒன்னும் பண்ண முடியாது என்று சவடால் பேசி யிருக்கிறார்

அன்னதானத் திட்ட உதவியாளர் திருநாவுக்கரசு பற்றி உள்ளூரில் சிலரோ, இந்த பையன் கோயிலுக்கு வந்த புதுசுல காதல் ஜோடிங்க மலைமேல ஏறுனா அவங்களை வீட்டுல சொல்லிடுவேன்னு சொல்லி மிரட்டி பணம் பறித்து வந்தாரு. கோயில்ல குடிக்க தண்ணி விடாம பைப்ப பூட்டி விட்டு போயிடரார். முன்னாடி துளசி வித்துக்கிட்டு இருந்தவங்களை காசு தராட்டி காலால எட்டி உதப்பாரு தட்ட. கோயிலை இந்த பையன் கண்ட்ரோல்ல விட்டதுனால தன் இஷ்டப்படி கோயிலை உண்டு, இல்லைன்னு ஆக்கியாச்சி என்கின்றனர் வெதும்பக்குரலில்

அன்னதானத் திட்டத்தில் சமையல் செய்பவருக்கு காய் நறுக்கி கொடுக்காமலும், உதவி செய்யாமலும் இருந்து வந்ததால் 11 வருடங்களாக சமையல் செய்தவர் இதுக்கு மேலயும் என்னால சமாளிக்க முடியாதுன்னு சொல்லி வேலை வேண்டுமென்றே எழுதி கொடுத்து சென்று விட்டாராம்

தான் உண்டு, தன் வேலை உண்டு என்று இருந்து வரும் செயல் அலுவலரிடம் தேவை யில்லாமல் எதையாவது சொல்லி சிக்கலில் மாட்டி விடுகிறாராம். *சமீபத்தில் பாடாலூர் மெயின் ரோட்டில் வணிக வளாகம் என்று கடைகளை ஏலம் விட்டதில், வணிக வளாகம் குட்டிச்சுவராக இருப்பதால் ஏலம் எடுத்த கோகிலா என்பவர் நுகர்வோர் நீதிமன்றம் செல்லும் சூழ்நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார். இந்த சம்பவம்தான் இதற்கு உதாரணம் என்கின்றனர்

1500 ரூபாய் சம்பளத்தில் அன்னதான திட்ட உதவியாளராக வேலை செய்து வருபவர் தனது சொந்த ஊரான திருச்சி மாவட்டம், லால்குடி தாலுக்காவிலுள்ள கீழரசூர் என்ற கிராமத்தில் திருமண மண்டபம் கட்டியுள்ளது மற்றும் அசையா சொத்துக்கள் வாங்கி போட்டுள்ளது குறித்து விஜிலென்ஸ் வரை புகார் சென்றுள்ளது தனிக்கதை

சலவை நிலையம் வைத்துள்ள முருகன் என்பவரோ, நான் கோயில் கடை எடுத்திருந்தேன். வாடகை கட்டாதவங்க கோர்ட்டுல கேஸ் போட்டாங்க. நான் முழுப்பணத்தையும் கோவில்ல கட்டிட்டு கடைய திறந்துவிட சொன்னேன். ரெண்டு வருஷமா அலைஞ்சி திரிஞ்சும் கடைய திறந்து விடல. இஓ மேல எந்த தப்பும் இல்ல. இந்த தக்கிடி பய திருநாவுக்கரசு நம்மள இல்லாம போயிட்டானே அப்படின்னு திறக்க விடாம பண்ணிட்டான். என்னோட பாவம் அவன சும்மா விடாது. நாசமா போயிடுவான்னு அழுவாத குறையா கூறினார் தழுதழுத்த குரலில்

9 வருசத்துக்கு முன்னாடி செட்டிக்குளத்தில் பெண்கள் விஷயத்தில் மாட்டி கட்டி போட்டாங்க. அப்ப கணக்கப்பில்லையா இருந்த தண்டபாணி இவன மன்னிப்பு கேக்க வச்சி மீட்டு வந்தாரு. இவ்வளவு மோசமானவனை போயி எப்படி கோயில் நிர்வாகம் பாக்க விட்டாங்க என்று திருநாவுக்கரசின் பழைய கதையை கூறினார் பெயரிட விரும்பாத பெரியவர் ஒருவர்

: கோயிலில் தண்ணீர் பைப்பை பூட்டுவது, கரண்டை கட் பண்ணுவது, மொட்டை அடிக்க அறநிலையத்துறை கட்டணம் இல்லை என்று அறிவித்திருந்த போதிலும் ஆபிசுக்கு கொடுக்க வேண்டுமென்று சொல்லி பணம் பறித்து வருவது, தன் சொல்படி கேட்காதவர்களை வேண்டுமென்றே இஓ விடம் கதை கட்டி விடுவது என்று ஆஞ்சநேயர் கோவிலை அலங்கோல படுத்தி வரும் அன்னதான திட்ட உதவியாளர் திருநாவுக்கரசை செயல் அலுவலர் இதுக்கு மேலும் தட்டி வைக்க வில்லையென்றால் பல விபரீதங்கள் நடந்திட வாய்ப்புள்ளது. அறநிலையத்துறை பெயருக்கு களங்கம் விளைவித்து வரும் இது போன்றோருக்கு செயல் அலுவலர் என்ன பாடம் கற்பிக்கப் போகிறார்?, இல்லை விட்டு விட போகிறாரா? உயரதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லும் முன் விழித்துக் கொள்வது நல்லது

## சமூக நலன் மற்றும் குழந்தைகள் நலத்துறை சார்பில் பள்ளி மாணவர்கள் போதை ஒழிப்பு விழிப்புணர்வு

தேனி. நவ.20

தேனி மாவட்டம் சின்னமனூரில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் மூலம் கிருஷ்ண ஐயர் மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவிகளுடன் இணைந்து போதை ஒழிப்புவிழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.முன்னதாக பள்ளியில் மாணவ மாணவிகள் மத்தியில் போதை பொருட்களின் தீமைகள் பற்றிமாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு



அலகின் சமூக பணியாளர் நிவேதினி விளக்கி எடுத்து கூறினர். மற்றும் ரோட்டரி சங்க நிர்வாகிகள்பள்ளி தலைமை ஆசிரியர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இதனை தொடர்ந்து ஊர்வலம் ஆனது பள்ளியில் தொடங்கி முத்தாலம்மன் கோவில் வரை சென்றடைந்து திரும்பியது. இந்நிகழ்வில் பள்ளி தலைமை ஆசிரியர், ஆசிரியர் பெருமக்கள் மற்றும் ரோட்டரி சங்க நிர்வாகி எம்.எம்.எஸ். தேவா, எச்ஐவி ஆலோசகர் சேகர் மற்றும் மகளிர் குழு உறுப்பினர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# டெல்லியில் தற்கொலைப் படை தாக்குதல் நடத்த கடைசி நேரத்தில் பின்வாங்கிய தீவிரவாதி

புதுடெல்லி, நவ.20-

டெல்லி குண்டுவெடிப்பு குறித்து என்ஐஏ அதிகாரிகள் கூறியதாவது: காஷ்மீரின் அனந்நாக் பகுதியை சேர்ந்த ஜசீர் முகமது பிலால் வானியும், காஷ்மீரின் புல்வாமா பகுதியை சேர்ந்த மருத்துவர் உமர் நபியும் நெருங்கிய நண்பர்களாக இருந்துள்ளனர். பாகிஸ்தானின் ஜெய்ஷ் இ முகமது தீவிரவாத அமைப்பில் இருவரும் இணைந்து உள்ளனர்.

டெல்லியில் தற்கொலைப் படை தாக்குதல் நடத்த பிலால் வானியே முதலில் தேர்வு செய்யப்பட்டு இருந்தார். ஆனால் கடைசி நேரத்தில் அவர் பின்வாங்கி உள்ளார். தனக்கு குடும்பம் மிகவும் முக்கியம். தற்கொலைப் படை தீவிரவாதியாக உயிரிழப்பது மதநெறிகளுக்கு எதிரானது என்று அவர் கூறியுள்ளார். இதன் காரணமாகவே மருத்துவர் உமர் நபி தற்கொலைப் படை தீவிரவாதியாக மாறி டெல்லியில் கார் குண்டு தாக்குதலை நடத்தி உள்ளார்.

கடந்த 2019ம் ஆண்டு அல் பலா மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டது. அப்போது முதல் யாரெல்லாம் கல்லூரியில் பணியாற்றினார்கள். அவர்களின் வருகைப் பதிவேடு, அவர் களுக்கு எவ்வளவு ஊதியம் வழங்கப்பட்டது என்பன குறித்த விவரங்களை சேகரித்து வருகிறோம். இந்த கல்லூரியை சேர்ந்த மருத்துவர்கள் உட்பட 8 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர். இவ்வாறு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

10 நாட்கள் காவல்: நகரில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட பிலால் வானி நேற்று டெல்லி முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். அவரை 10 நாட்கள் தங்கள் காவலில் விசாரிக்க தேசிய புலனாய்வு அமைப்பு (என்ஐஏ) அதிகாரிகள் கோரிக்கை விடுத்தனர். இதை ஏற்றுக் கொண்ட நீதிபதி அஞ்சு பஜாஜ் சந்தனா, தீவிரவாதி பிலால் வானியை 10 நாட்கள் என்ஐஏ காவலில் விசாரிக்க அனுமதி வழங்கினார்.

# தமிழகத்தில் குரூப்4 தேர்வு மூலம் 30,000 காலிப்பணியிடங்களை நிரப்ப சீமான் வலியுறுத்தல்

சென்னை, நவ.20-

குரூப்4 தேர்வு மூலம் நடப்பாண்டில் 30 ஆயிரம் காலிப்பணியிடங்களை நிரப்ப தமிழக அரசு முன்வர வேண்டும் என்று நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.



இதுகுறித்து, அவர் நேற்று வெளியிட்ட அறிக்கை: கடந்த 4 ஆண்டுகளில் ஓய்வுபெற்றோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக, அரசுத் துறைகளில் உள்ள காலிப்பணியிடங்களும் 4 லட்சத்துக்கும் மேல் உயர்ந்துள்ளது. அது மட்டுமின்றி இளைஞர்கள் பலரும் அரசுப் பணியில் சேர முயன்று வருவதால் போட்டித் தேர்வர்களின் எண்ணிக்கையும் லட்சக் கணக்கில் அதிகரித்துள்ளது.

இந்நிலையில், 2021ம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலின்போது ஆட்சிக்கு வந்தால், மூன்றரை லட்சம் அரசுப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்று திமுக வாக்குறுதி அளித்திருந்தது. இதனால் அதிக காலிப் பணியிடங்களுக்கு போட்டித் தேர்வு நடைபெறும் என்று தமிழக இளைஞர்கள் எதிர்பார்த்த நிலையில், 2 ஆண்டு கரோனா இடை வெளிக்குப் பிறகு, 2022ம் ஆண்டு நடைபெற்ற குரூப்4 தேர்வில் வெறும் 10,300 பணியிடங்கள் மட்டுமே நிரப்பப்படும் என்று திமுக அரசு அறிவித்து ஏமாற்றியது.

மேலும், 2023ம் ஆண்டு குரூப்4 தேர்வு நடத்தாமல் போட்டித் தேர்வர்கள் வயிற்றில் அடித்தது. இதைத் தொடர்ந்து, 2024ம் ஆண்டு நடைபெற்ற குரூப்4 தேர்வில் வெறும் 9,532 காலிப் பணியிடங்களை மட்டுமே நிரப்பி வஞ்சித்தது. இந்நிலையில் ஆட்சி முடியும் கடைசி ஆண்டில், இதுவரை இல்லாத அளவுக்கு மிகமிகக் குறைந்த அளவாக 3,945 பணியிடங்கள் மட்டுமே நிரப்பப்படும் என்று அறிவித்து திமுக அரசு அதிர்ச்சியளித்தது.

அதன்பின் கூடுதலாக 747 இடங்கள் நிரப்பப்படும் என்று தற்போது அறிவித்துள்ளது. இதனால் அரசுப் பணி கனவு நனவாகும் என்று நம்பிக்கையோடு, இரவு பகலாக படித்து, கடுமையாக உழைத்த அன்பு தம்பி, தங்கைகள் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகினர்.

எனவே, அரசுப்பணி போட்டித் தேர்வுக்கு முயற்சிக்கும் லட்சக்கணக்கான தமிழக இளைஞர்கள் வாழ்வில் ஒளியேற்றும் வகையில், அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குரூப்4 தேர்வு மூலம் நடப்பாண்டில் குறைந்தபட்சம் 30,000 காலிப் பணியிடங்களை நிரப்ப உடனடியாக அரசாணை வெளியிட வேண்டும். இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

# சின்னமனூர் தேவேந்திர குல வேளாளர் பொதுமக்கள் புறம்போக்கு இடத்தில் உள்ள பழக்கடைகளை அகற்றக் கோரி மனு

தேனி, நவ.20-

தேனி மாவட்டம் சின்னமனூர் நகராட்சியில் தேவேந்திர குல வேளாளார் மற்றும் பொதுமக்கள் ஜக்கம்மாள் கோவில் ஐயப்பன் கோவில் தெருவில் குடியிருக்கும் சமுதாய மக்களும் சின்னமனூர் நகராட்சி ஆணையரிடம் மனு அளித்தனர்.



தேனி கம்பம் மெயின் ரோட்டில் நாடார் லாட்ஜ் எதிர்புறம், புறம்போக்கு பகுதியில் சில பழக்கடைகள் உள்ளன.

இந்தப் பகுதி பொதுமக்களுக்கு மிகவும் வித்தியாசமான பகுதியாக இருக்கின்றது.இதனால் பொதுமக்கள் அந்தப் பகுதிக்கு அதிகளவில் வந்து செல்கின்றனர். இவ்விடத்தில் பழக்கடை என்ற போர்வையில் ஆட்களை வைத்து கஞ்சா போதை ஊசி மது விற்பனை மாத்திரைகள் போதை காளான்கள் போன்றவற்றை விற்பனை செய்வதாகவும் மற்றும் அருகில் உள்ள டாஸ்மார்க்கடைக்கு செல்லும் நபர்களிடமிருந்து மது பாட்டில்களையும் பிடுங்குவதும், பணம் பறிப்பதும் சமூக விரோதிகள் செய்கின்றனர்.

எனவே மேற்கொண்ட குற்ற செயலியில் ஈடுபடும் கயவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கும் அந்த இடத்தை மீட்டு பொதுமக்களுக்கு பயன்படும் விதமாக மாற்றித் தரவும் மனுவில் கோரிக்கை வைத்துள்ளனர். இந்த நிகழ்வில் தமிழக மக்கள் முன்னேற்ற கழகம் மண்டலச் செயலாளர் செந்தில்குமார் மனுவை சின்னமனூர் ஆணையாளர் கோபிநாத் அவர்களிடம் வழங்கினார்.

# மண்ணை கவ்விய காங்., திமுக எடுத்த திடீர் முடிவு! ராயப்பேட்டைக்கு வண்டியை விடும் விஜய்! பரபர ட்விஸ்ட்!

சென்னை, நவ.20-

விஜயை வைத்து திமுகவிடம் கூட்டணி பேரத்தை அதிகரிக்கலாம் என காத்திருந்த காங்கிரசுக்கு ஏமாற்றமே மிஞ்சி உள்ளது. 2026 தேர்தலில் காங்கிரஸ் திமுகவை விட்டு விலகாது என்கின்றனர் தேசிய தலைவர்கள். இந்த நிலையில் சீமானை போல சிறிது சிறிதாக வாக்கு வங்கியை உயர்த்த விரும்பாத விஜய் 'ஸ்ட்ரெயிட்டா சிஎம்' என்பது போல அதிமுகவுடன் கூட்டணி வைக்க தயாராகி உள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. இதற்காக அவரிடம் ஆந்திர மாடலை எடுத்துக் கூறியுள்ளனர் சில நிர்வாகிகள்.



2026 சட்டமன்ற தேர்தல் களம் எந்த கட்சிக்கும் அவ்வளவு எளிதாக இருக்காது என்று தான் சொல்லப்படுகிறது. காரணம் பெரும் கூட்டணி பலத்துடன் இருக்கும் திமுக மீண்டும் ஆட்சி அமைக்க தயாராகி வருகிறது. அதே நேரத்தில் ஆளுங்கட்சிக்கு எதிரான மனநிலை, சட்டம் ஒழுங்கு என பல பிரச்சனைகளை எடுத்து வைத்து அக்கட்சியை ஆட்சியில் இருந்து அகற்ற வேண்டும் என அதிமுக முயன்று வருகிறது.

இதற்காக தேர்தலுக்கு பல மாதங்களுக்கு முன்பே பாஜகவுடன் கூட்டணியும் அமைத்தது. இனிமேல் பாஜகவுடன் கூட்டணியே கிடையாது என பேசிய எடப்பாடி பழனிச்சாமி மக்களவைத் தேர்தலில் வாங்கிய அடியால் மீண்டும் அந்த கட்சியுடன் கூட்டணி அமைத்திருக்கிறார். அதிமுக கூட்டணி கூடுதலாக தமிழக வெற்றிக்காக விஜய் வரவால் ஆளும் கட்சிக்கும், ஆண்ட கட்சிக்கும் பிரச்சனை எழுந்துள்ளது. ஆளுங்கட்சிக்கு எதிரான வாக்குகள் உள்ளிட்டவை பிரியும் என்பதால், அது அதிமுக கூட்டணிக்கு சிக்கலாக அமையும். மேலும் சிறுபான்மை வாக்குகள், இளைஞர் வாக்குகள், பெண்கள் வாக்குகள் என திமுகவின் 'கோர்' ஓட்டு வங்கி விஜய்க்கு செல்லலாம் எனவும் கணிக்கப்படுகிறது. விஜய்க்கு 20 சதவீதம் வரை ஆதரவு இருப்பதாக சொல்லப்படும் நிலையில் விஜய் தனித்து களமிறங்குவார் என தமிழக வெற்றி கழகத்தினர் கூறி வருகின்றனர்.

விஜய் கூட்டணி சொன்னது போலவே கடந்த பொதுக்குழுவிலும் விஜய் தான் முதல்வர் வேட்பாளர் என தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. ஆனால், சமீபத்திய அரசியல் நிகழ்வுகள் விஜய்க்கு சாதகமாக அமையவில்லை. இதனால் கூட்டணி வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம் என விஜய் திட்டமிட்டு வருவதாக சொல்லப்படுகிறது. காரணம் காங்கிரஸ் உடன் கூட்டணி அமைக்கலாம் என விஜய் தரப்பு முயன்றது. கடந்த காலங்களில் ராகுலுடன் நெருக்கமாக இருந்தவர் விஜய். சில காங்கிரஸ் தலைவர்களும் விஜய்க்கு ஆதரவாகவே பேசி வருகின்றனர். ஆனால் உண்மையான நிலவரம் வேறு. காங்கிரஸ் அதிர்ச்சி அதிக இடங்களில் போட்டியிட்ட போதெல்லாம் காங்கிரஸ் தோற்று இருக்கிறது. பிற மாநிலங்களைப் போல தமிழகத்திலும் தோற்றால் காங்கிரஸ் கட்சிக்கு மிகப்பெரிய பின்னடைவாக கருதப்படும். எனவே 2026 தேர்தலில் கடந்த முறை போல 25 தொகுதிகளில் போட்டுவிட்டு 15க்கும் மேற்பட்ட தொகுதிகளில் பெற்றாலே போதும் என்பதுதான் காங்கிரஸ் கட்சியின் மனநிலை. செல்வபெருந்தகையும் அதனையே எதிரொலிக்கிறார். தலைமையிடமும் இதை எடுத்துச் சொல்லி நிலையில் ராகுல் காந்தியும் அதனை ஏற்றுக் கொண்டதாக சொல்லப்படுகிறது.

ராகுல் விஜய் சந்திப்பு மேலும் பீகார் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியால் காங்கிரஸின் செல்வாக்கு தேசிய அளவில் சரிந்து இருக்கும் நிலையில் விஜய்யும் அந்த கட்சியுடன் கூட்டணி சேரும் முடிவை தள்ளிப் போட்டுள்ளதாக சொல்லப்படுகிறது. இதனால் விஜய் ராகுல் காந்தி சந்திப்பு தள்ளிப் போக இருப்பதாகச் சொல்கின்றனர் அவரது ஆதரவாளர்கள். அதே நேரத்தில் கூட்டணி குறித்த சில வாய்ப்புகளை மறுபரிசீலனை செய்ய திட்டமிட்டு இருக்கிறார் விஜய். அந்த வகையில் திமுகவை வீழ்த்த அதிமுகவுடன் கூட்டணி சேரலாமா என விஜய் ஆய்வு நடத்தி வருவதாக சொல்லப்படுகிறது. ஆளும் கட்சி கட்சிக்கு எதிரான வாக்குகள் சிதறாது என்றாலும், பாஜகவுடன் கூட்டணி சேர்ந்தால் தனக்கு வரும் சிறுபான்மை வாக்குகள் குறைந்து விடும் என்பதையும் விஜய் கவனித்து வருகிறார். தவெக வியூகம் மேலும் துணை முதல்வர் பதவி 50 சீட்டுகள் என அதிமுகவுடன் பேரம் பேச திட்டமிட்டு இருந்தாலும் பாஜக கூட்டணியில் இருப்பது மட்டுமே விஜய்க்கு நெருக்கடியாக பார்க்கப்படுகிறது. அதே நேரத்தில் ஆந்திர மாடலில் ஜெகன்மோகன் ரெட்டியை வீழ்த்த பாஜக சந்திரபாபு நாயுடு பவன் கல்யாண் சேர்ந்தது போல, தற்போது திமுகவை ஆட்சியில் இருந்த அகற்ற பாஜக அதிமுக விஜய் சேரலாம் என அவரது ஆதரவாளர்கள் பேசியதாக சொல்லப்படுகிறது. நாம் பாஜகவுடன் கூட்டணி வைக்க வேண்டாம், அதிமுகவுடன் கூட்டணி வைக்கலாம் எனவும் சில நிர்வாகிகள் விஜயை உசுப்பேற்றிய நிலையில் அது தொடர்பாகவும் ஆலோசனை நடத்தப்பட்டு வருவதாக சொல்லப்படுகிறது. எது எப்படி எனினும் இன்னும் சில நாட்களில் விஜய் கூட்டணி தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிடுவார் என்கின்றனர் அவரது ஆதரவாளர்கள்.



# எஸ்.ஐ.ஆர். பணியை கைவிட வலியுறுத்தில் சென்னையில் நவ.24ல் ஆர்ப்பாட்டம் நடைபெறும்: திருமாவளவன் பேட்டி

சென்னை, நவ.20-

எஸ்.ஐ.ஆர். பணியை கைவிட வலியுறுத்தில் சென்னையில் நவ.24ல் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என திருமாவளவன் தெரிவித்துள்ளார். சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதல்வர் ஸ்டாலினுடன் விசிக தலைவர் திருமாவளவன் சந்தித்து பேசினார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பேசிய திருமாவளவன்; தேசிய தடய அறிவியல் பல்கலைக்கழகம் அமைக்க இடம் ஒதுக்கீடு செய்ததற்கு தமிழக அரசுக்கு நன்றி. ஈழத் தமிழர் விவகாரம் தொடர்பாக முதலமைச்சரிடம் பேசினேன். இலங்கை தமிழர்கள் முன்வைத்த கோரிக்கைகளை முதல்வரிடம் தெரிவித்துள்ளோம்.

தூய்மைப் பணியாளர்கள் போராட்டம் குறித்து பேசப்பட்டது. 20 ஆண்டுக்கு மேலாக தமிழக சிறையில் தண்டனை கைதிகளாக உள்ள இஸ்லாமிய சிறைவாசிகளை விடுவிக்க வேண்டும். பத்மஸ்ரீ விருது பெற்ற வேலு ஆசான் போன்ற கலைஞர்களுக்கு மாதாந்திரம் ரூ.20,000 வழங்க வேண்டும். அபாயகரமான ஆலைகளில் கர்ப்பிணிகள் தவிர மற்ற பெண்கள் பணியாற்றலாம் என்ற அரசாணையை ரத்து செய்ய வேண்டும். 30க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் வைத்துள்ள கோரிக்கை குறித்து முதலமைச்சரிடம் பேசினேன் என்று கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர்; வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி என்பது உள்நோக்கம் கொண்ட நடவடிக்கை; தேர்தல் ஆணையமும் பாஜகவும் சேர்ந்து நடத்தும் கூட்டு சதிதான் எஸ்.ஐ.ஆர். நடவடிக்கை; எஸ்.ஐ.ஆர். பணியை கைவிட வலியுறுத்தில் சென்னையில் நவ.24ல் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று கூறினார்.



■ திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வன உரிமைச் சட்டம் 2006ன்படி ஆய்வு அலுவலர்களுக்கான பயிற்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.செ.சரவணன், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது அருகில் சென்னை பழங்குடியினர் நலத்துறை பயிற்சியாளர் திரு.ராஜன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திரு.ராஜகுரு உட்பட பலர் உள்ளனர்.



# திமுகவுக்காக அதிமுகவை காத்திருப்பில் வைக்கிறதா தேமுதிக?

சென்னை, நவ.20-

“எங்கள் கூட்டணிக்கு இன்னும் சில கட்சிகள் வரவிருக்கின்றன” என சேலத்தில் இபிஎஸ்ஸை சந்தித்துப் பேசிய பிறகு ஜி.கே.வாசன் பேட்டியளித்த அதேநேரத்தில் மதுரையில், தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்தை எதிர்க்கட்சி துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார் ‘மரியாதை நிமித்தமாக’ சந்தித்துப் பேசியது பல்வேறு ஊகங்களை விதைத்து விட்டிருக்கிறது.

தேமுதிக வாக்குச் சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டத்துக்காக கடந்த 17ம் தேதி மதுரை வந்திருந்தார் அக்கட்சியின் பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த். இந்த நிகழ்ச்சியில் தான் பிரேமலதாவை உதயகுமார் திடீரென சந்தித்துப் பேசினார்.

இந்த சந்திப்பு முடிந்தவுடன், “அதிமுகவுடன் தேமுதிக கூட்டணி சேர வாய்ப்பு இருக்கிறதா... இந்த சந்திப்பு அதற்கான அச்சாரமா?” என செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு மழுப்பலாகவே பதிலளித்த பிரேமலதா, ‘‘கூட்டணி சிதம்பர ரகசியமா என்ன? ரகசியம் என்பதே தேமுதிக வரலாற்றில் கிடையாது. தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளுமே எங்களுக்கு தோழமைக் கட்சிகள்தான். அவர்கள் எல்லோருமே தேமுதிகவுடன் கூட்டணி வைக்க ஆர்வமாக உள்ளனர். என்றாலும் மாவட்டச் செயலாளர்களையும், நிர்வாகிகளையும் அழைத்துப் பேசி மக்கள் மனநிலையையும் ஆராய்ந்து நாங்கள் நிச்சயமாக நல்ல முடிவை எடுப்போம்” என்றார்.

அப்போதும் விடாத செய்தியாளர்கள், ‘‘திடீரென ஆர்.பி.உதயகுமார் உங்களை வந்து சந்தித்திருக்கிறாரே..?’’ என்று கேட்டதற்கு, ‘‘இவங்க கூட தான் கூட்டணி... அவங்க கூட தான் கூட்டணி என்று நாங்கள் இன்னமும் முடிவுக்கு வரவில்லை. எங்கம்மாவின் மறைவுக்கு அனைத்து தலைவர்களும் வந்து இறுதி மரியாதை செலுத்தினார்கள். பிரதமரும் இரங்கல் தெரிவித்தார். அந்த அடிப்படையில் தான் உதயகுமாரும் இன்று என்னை சந்தித்து துக்கம் விசாரித்தார்” என்றார்.

பிரேலதாவை சந்திக்கும் முன்பாக, தேமுதிக கூட்டம் நடந்த மண்டபத்தின் ஓர் அறையில் சுமார் அரை மணி நேரத்துக்கும் மேலாக உதயகுமார் காத்திருந்தார். கட்சிக் கூட்டத்தை முடித்துவிட்டு வந்து அவரை சந்தித்த பிரேமலதா, உதயகுமாரை உட்கார வைத்துக் கூட பேசாமல் நிற்க வைத்தே சுமார் 5 நிமிடங்கள் பேசிவிட்டு அவரை வழியனுப்பி வைத்தார்.

பிரேமலதாவை மரியாதை நிமித்தமாக சந்திக்கும்படி இபிஎஸ் தன்னை அனுப்பி வைத்ததாக உதயகுமாரே செய்தியாளர்கள் சந்திப்பில் வெளிப்படையாகச் சொன்னார். இருந்த போதும், இப்போதைக்கு யாருக்கும் பிடிகொடுத்துவிட வேண்டாம் என்ற முன் ஜாக்கிரதையுடன் உதயகுமாரை ‘ஆகட்டும் பார்க்கலாம்’ என்ற ரேஞ்சில் நிற்கவைத்தே பேசி அனுப்பி இருக்கிறார் பிரேமலதா.

இதுகுறித்து நம்மிடம் பேசிய மதுரை அதிமுக நிர்வாகிகள் சிலர், “மரியாதை நிமித்தமாக தன்னைச் சந்திக்க வந்த உதயகுமாரை பிரேமலதா தனியாகச் சந்தித்துப் பேசி இருக்கலாம். அல்லது 2 நாட்கள் மதுரையில் இருந்த அவரை யாருக்கும் தெரியாமலாவது போய் சந்தித்திருக்கலாம் உதயகுமார். ஆனால், அதற்கான வாய்ப்பை பிரேமலதா கொடுக்கவில்லை எனத் தெரிகிறது. ஒருவேளை, அதிமுக தங்களது தயவை தேடுகிறது என வெளியில் தெரியவேண்டும் என பிரேமலதா நினைத்தாரோ என்னவோ.

மக்களவைத் தேர்தலில் விருதுநகரில் போட்டியிட்ட விஜய பிரபாகரனுக்காக உதயகுமார் மிகக் கடுமையாக உழைத்தார். அதனால் தான் அவரை பேச்சுவார்த்தைக்கு அனுப்பி இருக்கிறார் இபிஎஸ். ஆனால் பிரேமலதா, திமுக சைடிலும் பேசிக்கொண்டு இருப்பார் போலிருக்கிறது. அதனால் தான் உதயகுமாரை பட்டும் படாமல் பேசி அனுப்பி இருக்கிறார்” என்றனர்.

தேமுதிக நிர்வாகிகளோ, ‘‘ஆலோசனைக் கூட்டம் நடந்து கொண்டிருக்கும் சமயத்தில் உதயகுமார் வந்துவிட்டார். அதனால், அவரை எங்கள் பொதுச்செயலாளர் கூட்டம் முடிந்து வந்து சந்தித்தார். இருவரும் அடுத்தடுத்த நிகழ்ச்சிகளுக்கு போக வேண்டி இருந்ததால் உட்கார்ந்து பேச நேரமில்லாமல் நின்று கொண்டே பேசினர்” என்றார்கள்.

# தமிழகத்தில் எஸ்.ஐ.ஆர் சிறப்பு தீவிர வாக்காளர் திருத்தப் பணிகளை புறக்கணிக்கிறோம் தமிழ்நாடு பேரூராட்சி ஊழியர் சங்க மாநில பொதுச்செயலாளர் டி.மகாலிங்கம் அறிவிப்பு

## வருவாய்த்துறை, ஊரகவளர்ச்சித்துறையினர் புறக்கணித்த நிலையில் பேரூராட்சி பணியாளர்களும் புறக்கணிப்பதால். எஸ்.ஐ.ஆர். பணிகள் பாதிப்படையும் நிலை



சின்னாபட்டி, நவ.20-

தமிழகத்தில் எஸ்.ஐ.ஆர் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளை புறக்கணிக்கிறோம் என்று தமிழ்நாடு பேரூராட்சி ஊழியர் சங்க மாநில பொதுச்செயலாளர் டி.மகாலிங்கம் அறிவித்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. வருவாய்த்துறை, ஊரகவளர்ச்சித்துறையினர் புறக்கணித்த நிலையில் பேரூராட்சி பணியாளர்களும் புறக்கணிப்பதால். எஸ்.ஐ.ஆர். பணிகள் பாதிப்படையும் நிலை உள்ளது.

தமிழ்நாடு பேரூராட்சி ஊழியர் சங்க மாநில பொதுச்செயலாளர் டி.மகாலிங்கம் அவர்கள் எஸ்.ஐ.ஆர் தீவிர வாக்காளர் திருத்தப்பட்டியல் தயார் செய்வதற்கான பணிகள் குறித்து விடுத்துள்ள அறிக்கையில் தமிழகத்தில் தற்போது தீவிர வாக்காளர் திருத்தப்பட்டியல் தயார் செய்வதற்கான எஸ் ஐ ஆர் எனப்படும் வேலைகளை தேர்தல் ஆணையம் தீவிரமாக அவசரகதியில் செயல்படுத்த சொல்லி வருகின்றது. வருவாய்த்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை இப்பணிகளை புறக்கணித்த நிலையில் பேரூராட்சி பணியாளர்களை வைத்து முடித்து விட பணிகள் அனைத்தும் பேரூராட்சி வசம் ஒப்படைப்பு செய்யப்பட்டு வருகிறது. பேரூராட்சியில் வழக்கமாக மேற்கொள்ளும் மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை போதிய பணியாளர்கள் இன்றி நிறைவேற்ற முடியாமல் பேரூராட்சி நிர்வாகம் திணறி வருகிறது. மேலும் அன்றாட பணிகளுக்காக பேரூராட்சிகளுக்கு வரும் பொதுமக்களும் பாதிப்படைகின்றனர். இது தவிர பேரூராட்சி பகுதியில் நடைபெறும் உங்களுடன் ஸ்டாலின் மனுக்கள் வார்டு சபா மனுக்கள் எஸ்.எப்ஃ.சி, பேஜ் ஓர்க் பணி , ஹெச் எப்.எ, திட்ட பணி கள், மரக்கன்று நடுதல், தெருவோர வியாபாரிகளுக்கான லோன், துப்புரவு பணியாளர்களுக்கான தாட்கோ அடையாள அட்டை போன்ற பணிகளை செய்து வருகின்றனர். இந்நிலையில் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிகளை தேர்தல் பணிகளை மன உளைச்சலோடு போதிய ஓய்வு உறக்கமின்றி மேற்கொள்ள இயலாத நிலை பேரூராட்சி பணியாளர்களுக்கு ஏற்பட்டுள்ளதால் எஸ்.ஐ.ஆர் தேர்தல் வாக்களர் பட்டியல் பணிகளை புறக்கணிப்பது என்று தமிழ்நாடு பேரூராட்சி ஊழியர் சங்கம் முடிவெடுத்துள்ளது என்று தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். இந்த அறிவிப்பு பேரூராட்சி ஊழியர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. இதன் மூலம் தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் எஸ்.ஐ.ஆர் சிறப்பு வாக்காளர் திருத்தப்பட்டியல் பணிகள் பெரும் அளவில் பாதிப்பு அடையும் நிலை உருவாகி உள்ளது.

# சித்தையன்கோட்டை அரசு மேல் நிலைப் பள்ளிக்கு நாடக மேடை, பேவர்பிளாக் கற்கள் தரைத்தளம் அமைக்க உத்தரவிட்ட ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர் பாராட்டு

## பள்ளிக்கு நலத்திட்ட உதவிகளை வாரிவழங்கும் வள்ளலாக அமைச்சர் ஐ.பெரியசாமி உள்ளார் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் மனதார நன்றி தெரிவித்தனர்



சின்னாளபட்டி, நவ.20-

சித்தையன்கோட்டை அரசு மேல் நிலைப் பள்ளிக்கு நாடக மேடை, பேவர்பிளாக் கற்கள் தரைத்தளம் அமைக்க உத்தரவிட்ட ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர் பாராட்டு தெரிவித்தனர். பள்ளிக்கு நலத்திட்ட உதவிகளை வாரிவழங்கும் வள்ளலாக இருக்கும் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் மனதார நன்றி தெரிவித்தனர்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அரசு மேல்நிலை ப்பள்ளியில் ஆத்தூர் தொகுதியை சேர்ந்த பள்ளி மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. விழா முடிந்தவுடன் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் பள்ளி தலைமை ஆசிரியர் காஸ்ட்ரோ மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழகத்தை சேர்ந்த ரபீக் மைதீன் ஆகியோர் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் பள்ளிக்கு நாடக மேடை மற்றும் பேவர்பிளாக் தரைத்தளம் அமைத்து கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை மனு கொடுத்தனர். மனுவை படித்தவுடன் அவர்களின் கோரிக்கையை உடனடியாக நிறைவேற்ற உத்தரவிட்டதுடன் அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்தார். அதன்பின்னர் பொதுமக்கள் மற்றம் கட்சி நிர்வாகிகள் மத்தியில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் ஆத்தூர் தொகுதியில் உள்ள அனைத்து நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலை பள்ளிகளாகவும், உயர்நிலை பள்ளிகள் மேல்நிலை பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டதால் கல்வி கற்கும் மாணவர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஆத்தூர் தொகுதி மாணவர்களின் நலன் கருதி ஆத்தூர் மற்றும் ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில் இரண்டு அரசு கலைக்கல்லூரிகள், மற்றும் பொறியியல் கல்லூரிகள் கொண்டுவரப்பட்டதால் ஆத்தூர் தொகுதி மாணவர்கள் ஒரு ரூபாய் செலவின்றி உயர்கல்வி கற்கும் நிலைமை உருவாகியுள்ளது. ஆத்தூர் தொகுதியில் உள்ள பள்ளிகளை பொறுத்தவரை வகுப்பறையாக இருந்தாலும் சரி, புதிய கட்டிடமாக இருந்தாலும் சரி ஒருநிமிடம் கூட தாமதிக்காமல் அதை நிறைவேற்றி வருகிறேன் என்றார். நிகழ்ச்சியின் போது மாவட்ட ஆட்சியர் செ.சரவணன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் உஷாநந்தினி, மண்டல இணைப்பதிவாளர் ஸ்ரீராகவ் பாலாஜி, திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர்கள் பிள்ளையார்நத்தம் முருகேசன், பாறைப்பட்டி ராமன், பேரூராட்சி செயல் அலுவலர் ஜெயமாலு, பேரூராட்சிமன்ற தலைவர் போதும்பொன்னு முரளி, துணைத்தலைவர் ஜாகீர் உசேன், பெற்றோர் ஆசிரியர் கழகத்தலைவர் ரபீக் மைதீன், சிறுபான்மையினர் நல அணியை சேர்ந்த வழக்கறிஞர் செல்லமரக்காயர், கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணலூர் மணிகண்டன், ஆத்தூர் மேற்கு ஒன்றிய திமுக அவைத்தலைவர் காணிக்கை சாமி, பேரூராட்சி மன்றதலைவர் ரேகா அய்யப்பன், சித்தையன்கோட்டை பேரூராட்சி செயலாளர் சக்திவேல், துணைச்செயலாளர் அலாவுதீன், பேரூராட்சி மன்ற முன்னாள் துணை தலைவர் தங்கபாண்டி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் நாக லெட்சுமி சசிகுமார், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், பேரூராட்சி தலைமை எழுத்தர் கரீம், வார்டு உறுப்பினர்கள் லாவண்யா சுரேஷ், தியாகு, பபிதா பானு, பேரூராட்சி துப்புரவு ஆய்வாளர் அபுபக்கர், குழாய் பொருத்துநர் ஜெயராஜ், கணிணி ஆப்ரேட்டர் பாலா மற்றும் திமுக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

# திருப்பூர் மாவட்டத்தில் சிறிய அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ் நாரணவரே தகவல்

திருப்பூர், நவ.20-

திருப்பூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் மூலம் சிறிய அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் 21.11.2025 வெள்ளிக்கிழமை அன்று காலை 10.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை திருப்பூர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் (அறை எண்.439) நடைபெறவுள்ளது. திருப்பூர் மாவட்டத்தை சார்ந்த முன்னணி தனியார்துறை

நிறுவனங்கள் வேலை வாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு வேலை நாடுநர்களை தேர்வு செய்யவுள்ளார்கள். வேலையளிக்கும் நிறுவனங்களால் தேர்வு செய்யப்படும் வேலைநாடுநர்களுக்கு முகாம் நாளன்று பணிநியமன ஆணை வழங்கப்படும். இந்த வேலைவாய்ப்பு முகாமில் 10 ஆம் வகுப்பு, ஐ.டி.ஐ, டிப்ளமோ படித்தவர்கள் மற்றும் பட்டப்படிப்பு படித்தவர்கள் கலந்து கொண்டு பயன்பெறலாம்.

முகாமில் கலந்து கொள்ளும் வேலை நாடுநர்கள் (Candidates) தங்கள் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு அட்டை மற்றும் சுயதகவல் (Resume) படிவத்துடன் கலந்து கொள்ளலாம். மேலும் இம்முகாமில் கலந்து கொள்ள விருப்பமுள்ள நிறுவனங்கள் (Employer) தங்களுக்கு தேவையான காலியிடங்களை நிரப்பிட உரிய விவரங்களுடன் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் முன்பதிவு செய்து கொள்ள தெரிவிக்கப்படுகிறது. மேலும் வேலைநாடுநர்களும் (Candidates) GÁõùƒèÀ‹ (Employer) https://www.tnprivatejobs.tn.gov.in/ என்ற தமிழ்நாடு தனியார்துறை வேலை இணையத்தில் முன்பதிவு செய்து கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

இந்த தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ள எவ்வித் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. எனவே வேலைநாடுநர்கள் இம்முகாமில் கலந்து கொண்டு வேலைவாய்ப்பு பெறலாம். மேலும் விவரங்களுக்கு 9499055944 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ்நாரணவரே, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.




# திருச்சியில் கூட்டுறவு வார விழா 2,892 பயனாளிகளுக்கு ரூ23.32 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள் அமைச்சர் கே. என். நேரு வழங்கினார்

.திருச்சி, நவ.20-

திருச்சி மாவட்டம் கூட்டுறவுத்துறை சார்பில் அனைத்திந்திய கூட்டுறவு வார விழா திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள கலையரங்கத்தில் நடைபெற்றது. விழாவிற்கு மாவட்ட இணைப் பதிவாளர் பாண்டியன் வரவேற்றார். மாவட்ட ஆட்சியர் வே.சரவணன் தலைமை தாங்கினார். திருச்சி மத்திய கூட்டுறவு வங்கி இணைப் பதிவாளர்,மேலாண்மை இயக்குனர் அரசு திட்ட விளக்க உரையாற்றினார். விழாவில் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே என் நேரு கலந்துகொண்டு, மாவட்ட அளவிலான சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்கும், பணியாளர்களுக்கும் பாராட்டு கேடயங்கள் மற்றும் 2,892பயனாளிகளுக்கு 23.32கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசினார். விழாவில் மாநகராட்சி மேயர் அன்பழகன், மாநகராட்சி ஆணையர் மதுபாலன், எம்எல்ஏக்கள் காடுவெட்டி தியாகராஜன், திருவரங்கம் பழனியாண்டி, துறையூர் ஸ்டாலின் குமார், லால்குடி சவுந்தர பாண்டியன், அமராவதி நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை இணைப் பதிவாளர் தனலட்சுமி, துணை பதிவாளர் முத்தமிழ்செல்வி கூட்டுறவு சார்பதிவாளர் அறிவழகன், கவுன்சிலர்கள் கலைச்செல்வி, புஷ்பராஜ் ,மண்டி சேகர், கூட்டுறவு சங்கங்களின் அலுவலர்கள், பணியாளர்கள்

கலந்து கொண்டனர். முடிவில் திருச்சி துணைப்பதிவாளர் முத்தமிழ் செல்வி நன்றி கூறினார்.

# திண்டுக்கல் மாவட்ட காவல்துறையுடன் இணைந்து செயல்பட ஊர்க்காவல் படைக்கு ஆள் சேர்ப்பு

திண்டுக்கல், நவ.20-

திண்டுக்கல் மாவட்ட காவல்துறையுடன் இணைந்து செயல்படும் ஊர்க்காவல் படையில் சேர்வதற்கு சேவை மனப்பான்மை கொண்ட ஆண்கள் மற்றும் பெண்கள் (திண்டுக்கல் நகர், திண்டுக்கல் ஊரகம், பழனி மற்றும் கொடைக்கானல் காவல் உட்கோட்ட பகுதியில் வசிப்பவர்கள் மட்டும்) தேவை.

கல்வித் தகுதி : SSLC

உயரம்: குறைந்தது 165 செ.மீ இருக்க வேண்டும்.

வயது: 20.11.2025 அன்று 20 வயது பூர்த்தியடைந்தவராகவும், 45 வயதிற்குள் இருக்க வேண்டும்.

எவ்வித குற்ற வழக்கிலும் சம்பந்தப்படாதவராக இருக்க வேண்டும், எந்த அரசியல்

அமைப்புகளிலும் சாராதவர்களாகவும் இருப்பது அவசியம், NCC மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இதற்கான விண்ணப்பம் திண்டுக்கல் பூமார்கெட் அருகிலுள்ள ஊர்க்காவல்படை அலுவலகத்தில் 20.11.2025 முதல் 24.11.2025 வரை ஐந்து நாட்கள் காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை வழங்கப்படும்.

இவ்விண்ணபத்தை பூர்த்தி செய்து உரிய சான்றிதழ்களின் நகல்களை இணைத்து (மதிப்பெண் பட்டியல், மாற்றுச் சான்றிதழ், ஆதார் கார்டு மற்றும் புகைப்படம் 2) 02.12.2025 அன்று மாலை 05 மணிக்குள் ஊர்க்காவல்படை அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

உடல்தகுதி மற்றும் நேர்முகத் தேர்வு திண்டுக்கல் சீலப்பாடி ஆயுதப்படை மைதானத்தில் 05.12.2025 அன்று காலை 9.00 மணிக்கு நடைபெறும் உடல் தகுதி மற்றும் நேர்முகத்தர்விற்கு வரும்போது அனைத்து சான்றிதழ்களின் அசல் மற்றும் ஆதார் அட்டை கொண்டுவர வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு 45 நாட்கள் திண்டுக்கல் ஆயுதப்படை மைதானத்தில் பயிற்சி அளிக்கப்பட்டு ஊர்க்காவல் படையில்

இணைக்கப்படுவார்கள் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

# டி.என்.பி.எஸ்.சி குரூப் 2 மற்றும் 2கி முதன்மைத் தேர்விற்கு இலவச பயிற்சி வகுப்புகள் மாவட்ட ஆட்சித்தலைவர் தகவல்



தேனி, நவ.20-

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் தொகுதி 2 மற்றும் 2Aஇல் நேர்காணல் மற்றும் நேர்காணல் அல்லாத முதல்நிலை தேர்வு 28.09.2025 அன்று நடைபெற்றது. இதற்கான முதன்மைத்தேர்வு (MAINS EXAM) வரும் பிப்ரவரி 2026இல் நடைபெற உள்ளது.

இத்தேர்விற்கான இலவச நேரடி பயிற்சி வகுப்புகள், தேனி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய வளாகத்தில் சிறந்த வல்லுநர்களைக் கொண்டு நாளை (19.11.2025) புதன்கிழமை முதல் துவங்கப்பட உள்ளது. இப்பயிற்சியின் போது கட்டணமில்லா பாடக்குறிப்புகள் வழங்கப்படும். மேலும், மாதிரி தேர்வுகள் நடத்தப்படும்.

எனவே தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட உள்ள தொகுதி 2 மற்றும் 2A முதன்மைத் தேர்விற்கு தயராகும் விண்ணப்பதாரர்கள் நேரடி பயிற்சி வகுப்பில் சேர்ந்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், இதுதொடர்பான கூடுதல் விவரங்களுக்கு தேனி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை நேரில் அல்லது 63792 68661 என்ற தொலைப்பேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் தெரிவித்துள்ளார்.



# திருச்சியில் ஜனவரி 2 திராவிட மாடல் ஆட்சி மீண்டும் தொடர மக்களிடம் ஆதரவு கேட்டு நடைபயணம் வைகோ பேட்டி

திருச்சி, நவ.20-

நடைபயணங்களில் நான் அரசியல் கட்சிகளை விமர்சித்தது கிடையாது ஆனால் வரும் ஜனவரி 2ந் தேதி திருச்சியில் தொடங்க உள்ள நடைபயணத்தில் சட்டமன்ற தேர்தலை மனதில் கொண்டு, திராவிட மாடல் ஆட்சி தொடர ஆதரவு தர வேண்டும் என பொதுமக்களிடம் வேண்டுகோள் வைக்க உள்ளேன் என்று வைகோ கூறினார்.

மதிமுக பொதுச் செயலாளர் வைகோ போதை பொருள்களுக்கு எதிராக வரும் ஜனவரி 2 ந் தேதி முதல் நடைபயணம் மேற்கொள்ள உள்ளார். திருச்சியிலிருந்து தொடங்க உள்ள அந்த நடைபயணத்திற்கு தொண்டர்களை தேர்வு செய்யும் நிகழ்ச்சி திருச்சியில் இன்று நடைபெற்றது. வைகோ தொண்டர்களை நேர்காணல் செய்தார். பின்னர் செய்தியாளர்களிடம் மதிமுக பொதுச்செயலாளர் வைகோ கூறியதாவது:

போதை பொருளுக்கு எதிராக நான் மேற்கொள்ள உள்ள நடைபயணம் 8வது நடைபயணம். ஏற்கனவே மதுவை எதிர்த்து 1200 கி.மீ நடந்துள்ளேன். அப்போது பலர் குறிப்பாக பெண்கள் ஆதரவு தெரிவித்தார்கள். எங்கள் ஊரில் டாஸ்மாக் கடையை அடித்து நொறுக்கினோம். அதிமுக அரசு அதற்கு எதிராக உச்ச நீதிமன்றம் வரை சென்றது. ஆனால் அந்த வழக்கை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது இன்று வரை எங்கள் ஊரில் டாஸ்மாக் கிடையாது. டாஸ்மாக்கை முழுமையாக ஒழிக்க முடியவில்லை. இன்று இளைஞர்கள் கஞ்சா உள்ளிட்ட போதை பொருட்களை பயன்படுத்தி வருகிறார்கள். கல்லூரி வரை வந்த போதை பொருள் இன்று பள்ளி வரை வந்து விட்டது. ஒவ்வொரு நடைபயணமும் தமிழகத்தின் வாழ்வாதாரத்தை காக்க, ஜாதி மத மோதல்கள் இல்லாத சமூகத்தை உருவாக்க என 7000 கி.மீ வரை நடந்துள்ளேன். இளம் நெஞ்சுகளில் ஜாதி, மத கருத்துக்களை விதைக் கிறார்கள். இந்நிகழ்வில் அதிமுக துணை பொதுச் செயலாளர் டாக்டர் ரொகையா, மாவட்டச் செயலா ளர்கள் வெல்லமண்டி சோமு, மணவை தமிழ்மாணிக்கம் டிடிசி சேரன்,நிர்வாகிகள் ராஜன் இளமுருகு ,ஆபீஸ் முத்துக்குமார்,பகுதிச் செயலாளர்கள் ஜங்ஷன் செல்லத்துரை, ஆசிரியர் முருகன் மற்றும் திரளான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## மாண்பமை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,வேடசந்தூர்

**1.A.No:-2/2020 in L.A.No:-1/2019 in O.S.NO.13/2013**

திருமதி பழனியம்மாள்

...மனுதார்/வாதி

VS

1.திரு.இளங்கோ
2.திருமதி.தனலட்சுமி
3.மைனர்மணிகண்டன்
(மேற்படியாருக்கு தாயாரும், கார்டியனுமான 2ம்பிரதிவாதி மூலம்)
4.திரு.ரஜாத்முகர்ஜி
5.திரு.சேகர்முகர்ஜி
6.திரு.K.N.பாலாஜி

எதிர்மனுதார்களள/பிரதிவாதிகள்

அறிவிப்பு


மேற்படி நம்பர் அசல் வழக்கில் மனுதாரர்/வாதி, எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது பாகப்பிரிவினை மற்றும் விளம்புகை பரிகாரம் கோரி மனுத்தாக்கல் செய்து, மேற்படி மனு கடந்த 12.01.2015 Dismissed for default என்று தள்ளுபடியான மனுவினை ரத்துச்செய்யக்கோரி மனுதாரர்/வாதியால் இடைக்கால மனு தாக்கல் செய்து, மேற்படி மனு I.A.NO.1/2019, I.A.NO.2/2020 28.11.2025-தேதி சமூகம் நீதிமன்றத்தில் வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி மனு சம்மந்தமாக ஆட்சேபணை இருந்தால் மேற்படி வாய்தா தினத்தன்று காலை 10.30 மணிக்கு அழைக்கும்போது ஆஜராகி தங்களது ஆட்சேபணையைத் தெரிவித்துக் கொள்ளவும். தவறினால் ஷை மனுவைப் பொறுத்து ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன்மூலம் கண்டிப்பாக தெரிவிக்கப்படுகிறது.

**திரு.M.சையது இப்ராஹிம்,BSC.,B.L.,**
வழக்கறிஞர்
கிருஷ்ணாபிளாசா முதல்மாடி,
ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்
செல் நம்பர்: 98425660080
M.S.No.861/2004

# ‘எங்களுக்கு 12 தொகுதிகள் வேண்டும்’ பழனிசாமியிடம் பந்திக்கு முந்திய ஜி.கே.வாசன்

சென்னை, நவ.20-

அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமியை சேலத்தில் உள்ள அவரது இல்லத்தில் ஜி.கே.வாசன் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார். அப்போது, அங்கிருந்த கட்சியினரை தவிர்த்து விட்டு இருவர் மட்டும் சுமார் 45 நிமிடங்கள் தனியாக பேச்சுவார்த்தை நடத்தினர்.



இந்த பேச்சுவார்த்தையின்போது, வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் தமாகாவுக்கு கூடுதல் இடங்களை ஒதுக்க வேண்டி பழனிசாமியிடம் ஜி.கே. வாசன் வலியுறுத்தியதாக தகவல் கசிந்துள்ளது.

இதுகுறித்து சேலம் அதிமுக நிர்வாகிகள் நம்மிடம் பேசுகையில், “கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக கூட்டணியில் அங்கம் வகித்த தமாகாவுக்கு 6 சீட் ஒதுக்கப்பட்டது. தொடர்ந்து அதிமுகவுடனும் பாஜகவுடனும் நல்லுறவைப் பேணி வரும் ஜி.கே.வாசன், வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் கூடுதல் இடங்களை ஒதுக்க வேண்டும் என்ற பிரதான கோரிக்கையுடனே எங்கள் பொதுச் செயலாளரை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.

பொதுச் செயலாளருடனான பேச்சுவார்த்தையின் போது, தமிழகத்தில் 4 மண்டலங்களிலும் பரவலாக தமாகா வேட்பாளர்களை தேர்தலில் நிறுத்த வேண்டும் என்ற முனைப்பை ஜி.கே.வாசன் காட்டியுள்ளார்.

இதன்படி, தஞ்சை, அரியலூர், திருச்சி, சேலம், ஈரோடு, திருநெல்வேலி, காஞ்சிபுரம் உள்ளிட்ட மாவட்டங்களில் தனது தீவிர ஆதரவாளர்களுக்காக வரும் தேர்தலில் 12 சீட்களை ஒதுக்க வேண்டும் என எங்கள் பொதுச்செயலாளரிடம் அவர் வலியுறுத்தியுள்ளார். இதுகுறித்து அதிமுக கூட்டணியில் அங்கம் வகிக்கும் பிற கட்சி தலைவர்களுடன் பேச வேண்டும் என்பதால் ஜி.கே. வாசனின் கோரிக்கையை மறுத்துப் பேசாமல் கேட்டுக் கொண்டிருக்கிறார் எங்கள் பொதுச்செயலாளர்.

கடந்த முறை 6 தொகுதிகளில் போட்டியிட்ட தமாகா ஒரு தொகுதியில் கூட ஜெயிக்காத நிலையில், இம்முறை 12 தொகுதிகளைக் கேட்கிறது. வாசன் கேட்ட 12 தொகுதிகளை அதிமுக தர யோசித்தால் அடுத்ததாக பாஜக தலைவர்களிடமும் பேசி தனக்கானதை சாதிக்க நினைப்பார் வாசன்” என்றனர்.

# ஆளாளுக்கு கிளம்பிட்டாங்களே! திமுகஅதிமுகவுக்கு குடைச்சல் கொடுக்கும் கூட்டணி! 2026ல் பீகார் மாடலா?

சென்னை, நவ.20-

சமீபகாலமாகவே ஆட்சி அதிகாரத்தில் பங்கு என்ற குரல் தமிழகத்தில் கேட்க தொடங்கி இருக்கிறது. அதிமுக கூட்டணியில் பாஜக, கூட்டணிக்கு வரலாம் என சொல்லப்படும் பாஜக, தேமுதிக, திமுக கூட்டணியில் காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள் என ஆளாளுக்கு கூட்டணியில் கூடுதல் சீட், ஆட்சி அதிகாரத்தில் பங்கு என பேசி வருவது கூட்டணிக்கு தலைமை தாங்கும் கட்சிகளை அதிருப்தியில் ஆழ்த்தியுள்ளது. ஆனால், பீகார், ஆந்திராவைப் போல கூட்டணி ஆட்சி தமிழகத்தில் மலர சாத்தியமில்லை என்கின்றனர் அரசியல் பார்வையாளர்கள்.



2026 சட்டமன்ற தேர்தலுக்கு தமிழ்நாடு தயாராகி வரும் நிலையில் கூட்டணியை பலப்படுத்தும் முயற்சிகளில் அதிமுக ஈடுபட்டுள்ளது. பாமக, அதிமுக கூட்டணிக்கு வருவது கிட்டத்தட்ட உறுதியாகிவிட்ட நிலையில், தேமுதிக பிடி கொடுக்காமல் பேசி வருகிறது. கடந்த மாநிலங்களவை தேர்தலில் தேமுதிகவுக்கு ஒரு சீட்டை ஒதுக்காததால் தான் பிரேமலதா விஜயகாந்த் அதிருப்தியில் இருக்கிறார். கடந்த காலங்களில் திமுகவை மிகக் கடுமையாக விமர்சித்து வந்த அவர் தற்போது மோதல் போக்கை கைவிட்டு இணக்கமாக பேசி வருகிறார். தமிழக அரசியல் இடையில் முதல்வர் ஸ்டாலினை சந்தித்ததும் தமிழக அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த நிலையில் கடந்த சில மாதங்களாகவே ஆட்சி அதிகாரத்தில் பங்கு என்ற கோரிக்கை தமிழகத்தில் வலுத்து வருகிறது. ஆந்திரா, பீகார், மகாராஷ்டிரா உள்ளிட்ட மாநிலங்களில் மாநிலக் கட்சிகளை உடைத்து புது கூட்டணி அமைத்த பாஜக அங்கெல்லாம் ஆட்சியில் பங்கெடுத்து உள்ளது. இந்த நிலையில் தமிழகத்திலும் கூட்டணி ஆட்சி என பாஜக தலைவர்கள் பேசி வருகிறார்கள்.

பாமக தேமுதிக இதற்கிடையே தொண்டர்களை சந்தித்து வரும் பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ், தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த், அடுத்த ஆண்டு நீங்கள் எல்லாம் அமைச்சராக போகிறீர்கள் என பேசி தொண்டர்களை உற்சாகப்படுத்து வருகின்றனர். திமுக கூட்டணியிலும், தங்கள் பங்குக்கு காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள் உள்ளிட்ட கட்சிகள் ஆட்சி அதிகாரத்தில் பங்கு, கூடுதல் இடங்களை கேட்போம் என பேசி வருகின்றனர். இப்படி கூட்டணி கட்சிகள் இதுவரை இல்லாத அளவு முழக்கத்தை முன்னெடுத்து இருப்பதால் தலைமை தாங்கும் கட்சிகள் அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளன.

ஆட்சி அதிகாரத்தில் பங்கு ஆனால் தமிழகத்தில் தற்போதைய சூழலில் கூட்டணி ஆட்சிக்கு வாய்ப்பில்லை என்று சொல்கின்றனர். திமுகவோ, அதிமுகவோ தனித்து போட்டியிட்டாலும், கூட்டணி அமைத்து போட்டியிட்டாலும் பெரும்பாலான தொகுதிகளில் வெற்றி பெற்று தனித்து ஆட்சியைப் பிடித்திருக்கின்றன. திமுகவுக்கு போதிய சட்டமன்ற உறுப்பினர்கள் இல்லாத போது கூட சில கட்சிகள் வெளியில் இருந்து தான் ஆதரவு அளித்தனர். கூட்டணி ஆட்சிக்கு திமுக சம்மதிக்கவும் இல்லை. அதிமுகவும் அப்படித்தான் காங்கிரஸ் காலத்திலும் சரி அதற்கு பிறகு அதிமுக, திமுக ஆட்சி காலங்களிலும் கூட்டணி ஆட்சி என்ற பேச்சுக்கே இடமில்லை.

கூட்டணி ஆட்சி ஆனால், “பீகார் ஃபார்முலாவை தமிழ்நாட்டில் புகுத்த பாஜக துடிக்கிறது. அதிமுகவை பலவீனமாக்கி குறைந்த தொகுதிகளில் வெற்றி பெற செய்து ஆட்சியில் பங்கெடுக்கலாம் என்பதுதான் பாஜகவின் எண்ணம். ஆனால் தமிழகத்தை பொறுத்தவரை எந்த கட்சியாக இருந்தாலும் பலத்த ஆதரவை தருவார்கள். எதிர்க்கட்சியை ஓட விடுவார்கள் என்பது தான் வரலாறு. கூட்டணி ஆட்சிக்கு தமிழகத்தில் சாத்தியம் இல்லை. தற்போது மட்டுமல்ல எப்போதுமே சாத்தியமில்லை” என்கின்றனர் தமிழக அரசியலை நுட்பமாக கவனித்து வரும் அரசியல் பார்வையாளர்கள்.

# ரேஷனில் சானிட்டரி நாப்கின் மானிய விலையில் தரக்கோரிய வழக்கு! அரசுக்கு ஐகோர்ட் முக்கிய உத்தரவு

சென்னை, நவ.20-

ரேஷன் கடைகளில், சானிட்டரி நாப்கின்களை மானிய விலையிலோ, இலவசமாகவோ வழங்கக் கோரிய வழக்கில், டிசம்பர் 16 ம் தேதிக்குள் பதிலளிக்காவிட்டால், சுகாதாரத் துறை உள்ளிட்ட மூன்று துறை செயலாளர்கள் நேரில் ஆஜராக வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் அதிரடியாக உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தின் அனைத்து ரேஷன் கடைகளிலும் மக்கள் அத்தியாவசிய பொருட்களை இலவசமாக பெற்று வருகிறார்கள். இதைத்தவிர, ரேஷன் அட்டையின் மூலம் அரசு வழங்கும் பல்வேறு நலத் திட்டங்களையும் பெற்று வருகின்றனர்.

ஒரு பாக்கெட் 30 ரூபாய் இப்படிப்பட்ட சூழலில்தான், தமிழகத்திலேயே முதல்முறையாக புதுதிட்டம் கடந்த 2023ல் அறிமுகமானது. அதன்படி, கரூர் மாவட்டத்தில் குளித்தலை அருகே மகாதானபுரம் ரேஷன் கடைகளில், மகளிர் சுய உதவி குழு மூலம் தயாரிக்கப்பட்ட சானிட்டரி நாப்கின்கள் விற்பனை ஆரம்பமானது. “தோழி” என்று சானிட்டரி நாப்கின்களுக்கு பெயரிடப்பட்டுள்ளது. ஆறு நாப்கின்கள் அடங்கிய ஒரு பாக்கெட் ரூபாய் 30 விலையில் நியாய விலை கடையில் விற்பனை செய்யப்படுகிறது. இது வெளிசந்தையில் விற்பனை செய்யப்படுவதை விட 25 சதவீதம் விலை குறைவாகும்.. ரேஷன் அட்டைதாரர்கள் மட்டுமில்லாமல் மற்ற பெண்கள் அனைவரும் நியாய விலைக்கடைகளில் இந்த சுகாதார சானிட்டரி நாப்கினை வாங்கிச் செல்லலாம்... இதன் மூலம் பெண்கள் அதிக தரத்திலான சானிட்டரி நாப்கின்களை பயன்படுத்த முடியும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில், சென்னை, தாம்பரம் பகுதியைச் சேர்ந்த வழக்கறிஞர் லட்சுமி ராஜா என்பவர் ஹைகோர்ட்டில் பொது நல மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.. சானிட்டரி நாப்கின்கள் அதில், “மாதவிடாய் காலங்களில், பெண்கள் சுகாதாரத்தை பேணுவது மிகவும் முக்கியமானது. சானிட்டரி நாப்கின்’களின் அதிக விலை காரணமாக, ஏழை பெண்களுக்கு ‘நாப்கின்’கள் கிடைக்காத காரணத்தால் கிராமப்புற பெண்களும், சுகாதார குறைவான மாற்று நடைமுறைகளை பின்பற்றி வருகின்றனர். பள்ளிகளில் இலவசமாக, நாப்கின்கள் வழங்க வேண்டும் என, அனைத்து மாநில அரசுகளுக்கும், உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டதில் இருந்து, அதன் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ள முடியும்.

ரேஷன் கடைகளில் சானிட்டரி நாப்கின் எனவே, தமிழகத்தில் ரேஷன் கடைகளில், ‘சானிட்டரி நாப்கின்களை இலவசமாகவோ, மானிய விலையிலோ வழங்கும் திட்டம் உள்ளதா என, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விண்ணப்பித்தபோது, அதுபோல எந்த திட்டமும் இல்லை என, பதிலளிக்கப்பட்டது. அதனால், ஏழை மற்றும் கிராமப்புற பெண்கள் பயன் அடையும் வகையில், ரேஷன் கடைகளில், மானிய விலையிலோ அல்லது இலவசமாகவோ , சானிட்டரி நாப்கின்களை வழங்க உத்தரவிட வேண்டும்“ என்று கேட்டுக் கொண்டார். இந்த மனுவானது, தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா, நீதிபதி ஜி.அருள்முருகன் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுவுக்கு பதிலளிக்க, அரசு தரப்பில் கால அவகாசம் கோரப்பட்டது. 3 துறை செயலாளர் ஆஜராக உத்தரவு இதையடுத்து நீதிபதிகள், “ஏற்கனவே இறுதி அவகாசம் வழங்கியும், இதுவரை பதில் மனு தாக்கல் செய்யவில்லை. எனவே, டிசம்பர் 16ம் தேதிக்குள் பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும். இல்லாவிட்டால், சமூக நலத் துறை, உணவுப் பொருள் வழங்கல் துறை மற்றும் சுகாதாரத் துறைகளின் செயலர்கள் நேரில் ஆஜராக நேரிடும்“ என்று அதிரடியாக உத்தரவிட்டுள்ளனர். பெண்களின் ஆரோக்கியத்தை நேரடியாக பாதிக்கும் சானிட்டரி நாப்கின்களின் தட்டுப்பாடு குறித்த இந்த வழக்கு மிகுந்த கவனத்தை பெற்று வருகிறது.. அத்துடன், பெண்களின் சுகாதார பாதுகாப்பு குறித்து அரசு எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மீண்டும் கவனத்திற்கு வந்துள்ளது.

# நம்ம மதுரையா இது.. ஜூனியர் ஹாக்கி உலகக்கோப்பை.. அடையாளம் தெரியாமல் மாறிய ரேஸ்கோர்ஸ் மைதானம்

மதுரை, நவ.20-

ஜூனியர் ஹாக்கி உலகக்கோப்பை தொடர் இன்னும் 8 நாட்களில் தொடங்க உள்ள நிலையில், மதுரை ரேஸ்கோர்ஸ் மைதானம் அடையாளம் தெரியாத அளவிற்கு மாறி இருக்கிறது. சர்வதேச தரத்திலான டர்ப் தொடங்கி வீரர்களுக்கான ஓய்வறை, பார்வையாளர்களுக்கான கேலரி, விஜபி கேலரி உள்ளிட்ட பணிகள் நிறைவடைந்துள்ளது.

14வது ஆடவர் ஜூனியர் உலகக்கோப்பை ஹாக்கி போட்டிகள் நவம்பர் 28ஆம் தேதி முதல் டிசம்பர் 10ஆம் தேதி வரை நடக்கவுள்ளது. சென்னை மற்றும் மதுரை ஆகிய இரு நகரங்களில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. மொத்தமாக உலகம் முழுவதும் இருந்து 24 நாடுகள் பங்கேற்கின்றன. இதனை சிறப்பாக நடத்த தமிழக அரசு தயாராகி வருகிறது.

ஏற்கனவே ஜூனியர் ஹாக்கி உலகக்கோப்பை தொடரில் பங்கேற்க உள்ள வீரர்கள் சென்னை வரத் தொடங்கியுள்ளனர். இதனிடையே மதுரையில் சர்வதேச தரத்தினாலான ஹாக்கி மைதானம் முழுவீச்சில் தயாராகி வருகிறது. இன்னும் 2 அல்லது 3 நாட்களில் மைதானத்தின் அத்தனை பணிகளும் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு முன்பாக மதுரை ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் ஹாக்கி மைதான அரங்குகள் இருந்தாலும், பார்வையாளர்களுக்கான கேலரி, வீரர்களுக்கான ஓய்வறை உள்ளிட்ட வசதிகள் செய்யப்படாமல் இருந்தது. தற்போது அந்த பணிகள் முழுமையாக முடிவடைந்துள்ளன. புதிய டர்ப், உடைமாற்றும் அறை, முதலுதவி அறை, ஆயிரம் பேர் அமர்ந்து பார்க்கும் வகையில் கேலரி, விஜபி கேலரி ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. இதற்காக மட்டும் ரூ.55 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்றன. மதுரையில் இதுவரை 2 முறை தேசிய அளவிலான ஹாக்கி போட்டிகள் நடந்துள்ளன. முதல்முறையாக சர்வதேச அளவிலான ஹாக்கி போட்டிகள் நடக்க உள்ளதால், ரேஸ்கோர்ஸ் மைதானமே மொத்தமாக மாறி இருக்கிறது. இது மதுரை மாவட்ட விளையாட்டு வீரர்களிடையே வரவேற்பை பெற்றுள்ளது.

அதேபோல் ஜூனியர் ஹாக்கி உலகக்கோப்பை தொடர் நடப்பதை மக்களுக்கு கொண்டு செல்லும் வகையில் மதுரையின் பல்வேறு பகுதிகளிலும் காட்சிப்படுத்தப்பட்டது. மீனாட்சியம்மன் கோவில் தொடங்கி, விளக்கத்தூண், தெப்பக்குளம் என்று இளைஞர்கள், மாணவர்கள் அதிகளவில் கூடும் இடங்களில் ஜூனியர் ஹாக்கி உலகக்கோப்பை காட்சிப்படுத்தப்பட்டது.

# மதுரை, கோவைக்கு மெட்ரோ ரயில் ஆடம்பரம் அல்ல.. அவசியம்“ மத்திய அரசுக்கு தங்கம் தென்னரசு கண்டனம்

சென்னை, நவ.20-

“கோவை, மதுரை நகரங்களுக்கு மெட்ரோ ரயில் என்பது ஆடம்பரம் அல்ல, அவசியமான உள்கட்டமைப்புத் தேவை. மத்திய அரசின் பாகுபாட்டை எதிர்த்து, தமிழ்நாட்டு மக்களின் நியாயமான உரிமைக்காகவும், எதிர்கால வளர்ச்சிக்காகவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எழுப்பிய குரலுக்கு முழு ஆதரவு தருவோம்“ என நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

மெட்ரோ ரயில் திட்டத்திற்கு தகுதியான நகரங்கள் கொண்ட பட்டியலை கடந்த 2011 ஆம் ஆண்டு மத்திய அரசு வெளியிட்டது. நாடு முழுவதும் உள்ள 19 இரண்டாம் நிலை நகரங்களில் மெட்ரோ ரயில் திட்டத்தை நிறைவேற்ற மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சகம் முடிவு செய்திருந்தது. புனே, கொச்சி, கோவை ஆகியவை இடம்பெற்றிருந்தன. கொச்சி மற்றும் புனேவில் மெட்ரோ ரயில் திட்டம் நிறைவேற்றப்பட்டுவிட்டது.

கோவைக்கு மட்டும் கடந்த 14 வருடங்களாக மெட்ரோ ரயில் திட்டம் கானல் நீராகவே உள்ளது. எடப்பாடி பழனிசாமி முதலமைச்சராக இருந்த கடந்த 2017 ஆம் ஆண்டு கோவையில் மெட்ரோ ரயில் திட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிவித்தார். 2021 தமிழ்நாடு பட்ஜெட்டில் ரூ.6,683 கோடி மதிப்பில் கோவை மெட்ரோ ரயில் திட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், அறிவித்த நிதி ஒதுக்கப்படவில்லை. திமுக ஆட்சிக்கு வந்த பிறகு கோவை, மதுரையில் மெட்ரோ ரயில் திட்டம் கொண்டு வரப்படும் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்தார். இதையடுத்து விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. நீண்ட நாட்களாக ஒப்புதல் வழங்காமல் காத்திருப்பில் இருந்த நிலையில் கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களை மத்திய அரசு நிராகரித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இது தமிழக மக்கள் மத்தியில் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.


இந்நிலையில் இதுதொடர்பாக தமிழக நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு எக்ஸ் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், “மதுரையும், கோவையும் தமிழ்நாட்டின் பெருமைமிகு நகரங்கள். இவை இரண்டும் இந்தியாவின் வேகமாக வளரும் Tier-II நகரங்களில் முக்கியமானவை. இந்த நகரங்களுக்கு மெட்ரோ ரயில் என்பது ஆடம்பரம் அல்ல; அவசியமான உள்கட்டமைப்புத் தேவை. மக்கள் நெருக்கடியைக் குறைப்பது. பொருளாதாரத்தை மேம்படுத்துவது, என அனைத்துக்கும் மெட்ரோ இன்றியமையாதது.

மத்திய பாஜக அரசின் பாகுபாட்டை எதிர்த்து, தமிழ்நாடு மக்களின் நியாயமான உரிமைக்காகவும், எதிர்கால வளர்ச்சிக்காகவும் மதுரை மற்றும் கோவை மெட்ரோ ரெயில் திட்டத்தை வழங்கக் கோரி தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுப்பிய குரலுக்கு முழு ஆதரவு தெரிவிப்போம்“ எனக் குறிப்பிட்டுள்ளார்.

# கோவை வரும் பிரதமருக்கு எதிர்ப்பு: விவசாயிகள், மறுமலர்ச்சி மக்கள் இயக்கத்தினர் போராட்டத்தால் பரபரப்பு

கோவை, நவ.20-

பிரதமர் மோடி வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து கோவையில் மறுமலர்ச்சி மக்கள் இயக்கத்தினர் போராட்டம் நடத்தி வருவதால் பரபரப்பு நிலவி வருகிறது. மதுரை, கோவையில் மெட்ரோ ரயில் திட்டத்தை ஒன்றிய அரசு நேற்று நிராகரித்தது. கோவை கொடிசியாவில் தென்னிந்திய இயற்கை வேளாண் கூட்டமைப்பு சார்பில் நடைபெறும் விவசாயிகள் மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி இன்று கோவைக்கு வருகை தருகிறார். வேளாண் மாநாட்டில் பங்கேற்க கோவை வரும் பிரதமர் மோடிக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து கோவையில் மறுமலர்ச்சி மக்கள் இயக்கத்தினர் போராட்டம் நடத்தி வருவதால் பரபரப்பு நிலவி வருகிறது.




இந்த ஆர்ப்பாட்டத்தில் கோவைக்கு பிரதமர் மோடி தலைமையிலான ஒன்றிய அரசு துரோகம் செய்துவிட்டது. கோவையின் வளர்ச்சியை தடை செய்துவிட்டு கோவையில் மோடிக்கு என்ன வேலை? கோவை மெட்ரோ ரயில் திட்டத்தை முடக்காதே என்றும், உடனடியாக அனுமதி தர வேண்டும் என்று போராட்டக்காரர்கள் முழக்கம் எழுப்பினர்.

அதேபோல வேளாண் மாநாட்டை புறக்கணித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பினர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். மோடியின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து கோவையில் விவசாயிகள் கருப்புக் கொடி ஏந்தி போராட்டம் நடத்தி வருகின்றனர். இயற்கை வேளாண்மைக்கு முற்றிலும் எதிரான மரபணு மாற்றப்பட்ட நெல் விதிகளை இறக்குமதி செய்ததற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இயற்கை விவசாயத்துக்கு மானியம் இல்லை. மரபணு விதைகளை இறக்குமதி செய்ய டெல்லியில் ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்துவிட்டு வேளாண் மாநாடு நடத்துவதற்கு விவசாயிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

# ஆந்திர வனப்பகுதியில் 7 மாவோயிஸ்டுகள் சுட்டுக்கொலை

அமராவதி, நவ.20-

ஆந்திரப் பிரதேசத்தின் மாரேடுமில்லி காடுகளில் பதுங்கியிருந்த மாவோயிஸ்டுகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சூட்டில் 7 மாவோயிஸ்டுகள் கொல்லப்பட்டனர். கடந்த 24 மணி நேரத்தில் ஆந்திராவில் நடந்த இரண்டாவது துப்பாக்கிச்சூடு இது.




இந்த துப்பாக்கிச்சூடு தொடர்பாக விஜயவாடாவில் செய்தியாளர்களிடம் பேசிய கூடுதல் டிஜிபி மகேஷ் சந்திர லத்தா, “ஆந்திரப் பிரதேசத்தின் அல்லூரி சீதாராம ராஜு மாவட்டத்தில் உள்ள மாரேடுமில்லி காடுகளில், தடைசெய்யப்பட்ட சிபிஐ (மாவோயிஸ்ட்) இயக்கத்தைச் சேர்ந்த மாவோயிஸ்டுகள் பதுங்கி இருப்பது குறித்து தகவல் கிடைத்தது. இதையடுத்து, நேற்று நடைபெற்ற தேடுதல் வேட்டையின்போது, மாவோயிஸ்ட் அமைப்பின் முக்கிய தலைவர் மாத்வி ஹித்மா அவரது மனைவி மதகம் ராஜே உள்ளிட்ட 6 பேர் கொல்லப்பட்டனர். இந்த மோதலின்போது சில மாவோயிஸ்டுகள் தப்பிவிட்டனர்.

இந்நிலையில், தொடர்ந்து நடைபெற்ற தேடுதல் வேட்டையின்போது இன்று காலை 7 மணி அளவில் நடைபெற்ற மோதலில், 7 மாவோயிஸ்டுகள் கொல்லப்பட்டனர். இவர்களில், 3 பேர் பெண் மாவோயிஸ்டுகள், 4 பேர் ஆண் மாவோயிஸ்டுகள்.

சிபிஐ (மாவோயிஸ்ட்) அமைப்பின் ஆந்திர ஒடிசா எல்லை பகுதிக்கான மத்தியக் குழு பொறுப்பாளரான டெக் சங்கர் என அழைக்கப்படும் மேட்டூரி ஜோகா ராவ் இந்த மோதலில் கொல்லப்பட்டார். இவர் தொழில்நுட்பம் சார்ந்த நடவடிக்கைகளில் நிபுணத்துவம் பெற்றவராக இருந்துள்ளார். மற்றவர்கள் குறித்து அடையாளம் காணப்பட்டு வருகிறது. தொடர்ந்து அங்கு தேடுதல் வேட்டை நடைபெற்று வருகிறது.” என தெரிவித்தார்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000